<u>நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் நடவடிக்கைகள்</u>
<u>807, அண்ணா சாலை, சென்னை-600 002.</u>
<u>முன்னிலை: திரு ஆ.கார்த்திக், இ.ஆ.ப.,</u>
www.tn.gov.in/dtcp
email id: dtcp@vsnl.net

<u>ந.க.எண்.4711/2012/சிபி</u> <u>நாள்:27.03.2012</u>

பொருள்: நகர் ஊரமைப்பு - கல்லூரி கட்டிடம் - மதுரை மண்டலம் - விருதுநகர் மாவட்டம்/வட்டம் - ஆமத்தூர் கிராமம், சர்வே எண்கள்:152/3; 158/2; 160; 161; 162/1, 2; 163/1, 2; 165/1A, 2; 166/2; 167/1, 2; 168; 169; 170/1A, 1B, 2; 171; 172/2A; 173; 179/1, 2; 180/1, 2; 181; 183/2; 285A/1, 2, 3; 286A/1, 2, 3; 288A/1, 2-ல்164786.62 சதுரமீட்டர் பரப்பு மனை ஒப்புதல் - கல்லூரி உபயோகக் கட்டுமானம் - கட்டட அனுமதி வழங்க இசைவளித்தல் - குறித்து.

பார்வை:
1. தலைவர், பஞ்சுராஜன் அமராவதி டிரஸ்ட் என்பவரது மனு நாள்:6.12.2011, 5.3.2012, 15.3.2012 மற்றும் 24.3.2012.
2. மதுரை மண்டல துணை இயக்குநர் கடிதம் ந.க.எண்.3833/2011 மம3, நாள்:23.2.2012.
3. ஆமத்தூர் இரண்டாம் நிலை ஊராட்சி தலைவர் கடிதம் நாள்:14.12.2011.
4. அரசாணை (நிலை) எண்.161, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:9.9.2009.
5. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/2009/பிஏ2, நாள்:16.4.2009.
6. நகர் ஊரமைப்பு ஆணைய்ர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.9278/2007/பிஏ1, நாள்:16.6.2009.

-------

**<u>உத்தரவு</u>:**

மதுரை மண்டலம், விருதுநகர் மாவட்டம்/வட்டம், ஆமத்தூர் கிராமம், சர்வே எண்கள்:152/3; 158/2; 160; 161; 162/1, 2; 163/1, 2; 165/1A, 2; 166/2; 167/1, 2; 168; 169; 170/1A, 1B, 2; 171; 172/2A; 173; 179/1, 2; 180/1, 2; 181; 183/2; 285A/1, 2, 3; 286A/1, 2, 3; 288A/1, 2-ல் 164786.62சதுரமீட்டர் பரப்பு கொண்ட மனைக்கு 1 முதல் 31 வரை மற்றும் 32 முதல் 53 வரை என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில்

..2..

| Floors | Area (in Sq.m.) |
|---|---|
| **First Year Block** | |
| Ground Floor | - 2715.175 |
| First Floor | - 2715.175 |
| Second Floor | - 2041.454 |
| Third Floor | - 60.793 |
| **Work Shop** | |
| Ground Floor | - 938.162 |
| **Boys Hostel** | |
| Ground Floor | - 4857.946 |
| First Floor | - 3521.809 |
| Second Floor | - 3521.809 |
| Third Floor | - 50.841 |
| **Girls Hostel** | |
| Ground Floor | - 4857.946 |
| First Floor | - 3521.809 |
| Second Floor | - 3521.809 |
| Third Floor | - 50.841 |
| **Store** | |
| Ground Floor | - 439.414 |
| **Security Room & Maintenance Yard** | |
| Ground Floor | - 45.604 |

O.S.R. = 16611.43 Sq.m.

மேற்கண்ட கல்லூரி உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், நிபந்தனைகளுடன் கட்டட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.ஆ.எண்.73/2012 என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

**<u>சிறப்பு நிபந்தனைகள்</u>:**

1. EIA Clearance சான்று பெற்றுக் கொண்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்
2. கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடங்கள் தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். பத்திர நகல்கள் இவ்வலுவலகத்திற்கும், சம்மந்தப்பட்ட மண்டல துணை இயக்குநர், மதுரை மண்டல அலுவலகத்திற்கு ஒருவார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்.
3. பொது ஒதுக்கீடு திறவிடங்கள் நிறுவனத்தினர், உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்கப்பட வேண்டும்.
4. பொது ஒதுக்கீடு திறவிடங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு அதன் விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்மந்தப்பட்ட மண்டல துணை இயக்குநர், மதுரை மண்டலம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

**<u>நிபந்தனைகள்</u>:**

1) உத்தேச கல்லூரி உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water heating System அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்:11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9) அரசாணை எண்.341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்:3.11.04-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

முத்திரை இடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பார்வை 4, 5 மற்றும் 6-ல் காணும் சுற்றறிக்கைகள் மற்றும் அரசாணையின்படி உரிய மனை ஒப்புதல்/உட்பிரிவு, நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் மண்டல அலுவலகத்தால் பெற்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் திட்ட அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

மதுரை மண்டலம், துணை இயக்குநர் அவர்கள் மேற்கொண்டு உத்திரவினை விண்ணப்பத்தாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு மதுரை மண்டலம், துணை இயக்குநர் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்புமாறு மதுரை மண்டலம், துணை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு: மூன்று தொகுப்பு வரைபடங்கள்.

(ஒம்)/-ஆ.கார்த்திக்
நகர் ஊரமைப்பு ஆணையர்

பெறுநர்:
மண்டல துணை இயக்குநர்,
மதுரை மண்டலம்,
மதுரை.

நகல்:
1. தலைவர்,
   ஆமத்தூர் ஊராட்சி,
   விருதுநகர் மாவட்டம்.
2. தலைவர்,
   பஞ்சுராஜன் அமராவதி டிரஸ்ட்,
   AAA College of Engineering & Technology,
   74C, வேலாயுதம் ரோடு,
   சிவகாசி.
3. உதிரி-1 (கோப்புக்கு).

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

27/3/12

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

27-3/12